**ஜுன் – 12**

# TNPSC துளிகள்

- ❖ வேயன் என்ற கிராமமானது தனது கிராமத்தைச் சேர்ந்த 18 வயதுக்கு மேல் உள்ள அனைவருக்கும் கோவிட்-19 தடுப்பு மருந்தினை வழங்கிய ஒரு முதல் இந்தியக் கிராமமாக உருவெடுத்துள்ளது.
    - இது ஜம்மு & காஷ்மீரின் பந்திப்போரா மாவட்டத்தில் 18 வயதிற்கு மேல் 362 நபர்கள் என்ற மக்கள்தொகை கொண்ட ஒரு தொலைதூர கிராமமாகும்.
- ❖ ரஷ்ய நாடானது ரேடாருக்குப் புலப்படாத வகையிலான தொழில்நுட்பத்தினாலான தனது முதலாவது கடற்படைக் கப்பலைக் கட்டமைத்து வருகிறது.
    - ரேடாருக்குப் புலப்படாத தொழில்நுட்பமானது (Stealth technology) ஒரு கப்பலைக் கண்டறிவதை மிகவும் கடினமானதாக்கும்.
- ❖ சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகிய வங்கிகளிலுள்ள இந்திய அரசின் பங்குகளை விலக்கி கொள்வதற்கு நிதி ஆயோக் அமைப்பானது பரிந்துரை செய்துள்ளது.
    - இது இந்தியாவின் மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட தனியார் மயமாக்கலுக்கான முன்னெடுப்பின் ஓர் அங்கமாகும்.
- ❖ இந்திய நாடானது ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக மன்றத்தின் ஒரு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
    - 2022 முதல் 2024 ஆம் ஆண்டு வரை இந்தியா இந்தப் பொறுப்பினை வகிக்கும்.

# தேசியச் செய்திகள்

## சுரக்சித் ஹம் சுரக்சித் தும் அபியான்




- ❖ நிதி ஆயோக் மற்றும் பிரமல் அறக்கட்டளை ஆகியவை இணைந்து 'சுரக்சித் ஹம் சுரக்சித் தும் அபியான்' எனும் ஒரு இயக்கத்தைத் தொடங்கியுள்ளன.
- ❖ அறிகுறிகளற்ற அல்லது லேசான அறிகுறிகளுடன் கூடிய கோவிட்-19 நோயாளிகளுக்கு வீட்டிலேயே இருந்து குணமடைவதற்கு வேண்டிய சிகிச்சை

முறையிலான உதவிகளை வழங்குவதற்காக என்று இந்த இயக்கமானது தொடங்கப் பட்டு உள்ளது.

- இது 112 உயர் லட்சிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த இயக்கத்திற்கு பிரமல் அறக்கட்டளையால் உதவிகள் வழங்கப் பட உள்ளது.
- இந்த நிறுவனமானது அரசு சாரா நிறுவனங்கள் (தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்) மற்றும் தன்னார்வலர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டி மாவட்ட ஆட்சியர்களுடன் இணைந்து பணியாற்றும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர்

- மாலத்தீவு நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்துல்லா சாஹீத் ஐக்கிய நாடுகள் பொது ச்சபையின் தலைவராகத் (2021-22) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அப்துல்லா சாஹீத் அவர்கள், ஆப்கானிஸ்தானின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மாய் ரசௌல் என்பவரை எதிர்த்து வெற்றிப் பெற்றார்.
- மாலத்தீவு நாடானது முதன்முறையாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்க உள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைமைப் பொறுப்பிற்கான தேர்தலானது ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும்.


## ஓபன் ஸ்கைஸ் ஒப்பந்தம் - ரஷ்யா விலகல்

- ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் அவர்கள் ஓபன் ஸ்கைஸ் ஒப்பந்தத்திலிருந்து ரஷ்யா விலகுவதை அதிகாரப்பூர்வமாக்கும் ஒரு சட்டத்தில் கையெழுத்திட்டுள்ளார்.
- 2020 ஆம் ஆண்டில் அமெரிக்க நாடானது இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகியதைத் தொடர்ந்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ஓபன் ஸ்கைஸ் ஒப்பந்தம் (திறந்த வான்வெளி) என்பது ஒப்பந்த நாடுகளுக்கு மற்றொரு நாட்டினுடைய இராணுவப் படைகளின் தகவல்களைச் சேகரிக்க அனுமதி வழங்கும் ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- இது வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- ரஷ்யா இந்த ஒப்பந்தத்தை மீறியதாக கூறி 2020 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் அமெரிக்கா இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகியது.

## அடுகனுமாப்

- அடுகனுமாப் (அடுஹெல்ம்) என்பது அல்சைமர் நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்காக அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு புதிய மருந்தாகும்.
- இது பயோஜென் எனும் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- அல்சைமர் நோயானது மூளையிலுள்ள நியூரான்களின் சிதைவினால் ஏற்படும் சிதைவுப் பொருட்களை ஒன்று திரளச் செய்கிறது.
- இது அப்பகுதியில் வீக்கம் ஏற்பட வழிவகுக்கிறது.

- அடுகனுமாப் என்பது ஓர் ஓரின நகல் நோய் எதிர்ப் பொருளாகும்.
- இது மூளையில் வீக்கங்களை உருவாக்கச் செய்யும் அமைலாய்டு பீட்டா எனும் புரதம் இருப்பதைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.




## Remain in mexlco கொள்கை ரத்து

- டிரம்ப் அரசினுடைய "Remain in Mexico" என்ற கொள்கையை தற்போதைய அமெரிக்க அரசு ரத்து செய்துள்ளது.
- இந்தக் கொள்கை அமெரிக்காவில் புகலிடம் கோரும் ஆயிரக்கணக்கான மத்திய அமெரிக்க நாட்டு அகதிகளை அமெரிக்க நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்காக வேண்டி மெக்சிகோவில் காத்திருக்கச் செய்து விட்டது.
- இந்தக் கொள்கை ரத்தானதையடுத்து இதில் பதிவு செய்த 11,000 என்ற அளவிலான புலம்பெயர்ந்தோர்கள் புகலிடத்திற்கான கோரிக்கையைத் தொடர்ந்திட வேண்டி அமெரிக்காவினுள் நுழைவதற்கு அனுமதிக்கப் படுவர்.

# பொருளாதாரச் செய்திகள்


## உலகளாவியப் பெருநிறுவன வரி ஒப்பந்தம்

- செல்வச் சிறப்புமிக்க G7 நாடுகளின் நிதி அமைச்சர்கள் குழுமமானது ஒரு புதிய உலகளாவியப் பெருநிறுவன வரி ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ஜூலை மாதத்தில் நடைபெற உள்ள G20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் ஆளுநர்கள் சந்திப்பில் இந்த ஒப்பந்தம் குறித்து விரிவாக விவாதிக்கப் படும்.
- பெருநிறுவனங்கள் தாம் வணிகம் செய்யும் நாடுகளில் மேற்கொள்ளும் வரி ஏய்ப்பினைத் தடுத்து அந்த நிறுவனங்களை வரி செலுத்தச் செய்வதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- ஒவ்வொரு நாடும் தமக்கிடையே வரி வீதத்தைக் குறைக்கச் செய்து கொள்வதை தவிர்ப்பதற்காக இந்த ஒப்பந்தத்தில் உலகளாவிய குறைந்தபட்ச பெருநிறுவன வரி வீதம் ஆனது 15 சதவீதமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கார்பன் நானோ குழாய்களிலிருந்து மின்சாரம்


- மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பொறியாளர்கள் கார்பன் நானோ (நுண்) குழாய்களைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் புதிய வழிமுறையைக் கண்டறிந்துள்ளனர்.
- கார்பன் நானோ குழாய்களால் (நுண் குழாய்கள்) ஆன இந்தப் புதிய சாதனமானது தனது சுற்றுப்புறச் சூழலிலுள்ள ஆற்றலைச் சேகரித்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வல்லமையைக் கொண்டது.
- இந்த நுண்ணிய கார்பன் துகள்கள் அதனைச் சுற்றியுள்ள திரவத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் மின்னோட்டத்தை உருவாக்க இயலும்.
- ஒரு கரிமக் கரைப்பான் எனும் வகையிலான இந்தத் திரவமானது நானோ நுண் துகள்களிலிருந்து மின்னோட்டத்தை உருவாக்கும் எலக்ட்ரான்களை ஈர்க்கிறது.




## CAR – T செல் சிகிச்சை

- சைமரிக் ஆன்டிஜன் ஏற்பு – T செல் சிகிச்சைக்கான மருத்துவச் சோதனைகளானது உலகளவில் மேற்கொள்ளப்பட்டது.
- இது இறுதிகட்ட நிலையிலுள்ள புற்றுநோய் நோயாளிகளுக்கு, குறிப்பாக தீவிரமான நிண நீர்க் குழியப் புற்றுநோய் (Acute Lymphocytic Leukemia) உள்ள நோயாளிகளுக்கு நம்பிக்கை தரும் வகையில் மிகுந்த பலன்களை அளித்துள்ளது.
- முதலாவது CAR – T செல் சிகிச்சை முறையானது மும்பையின் இந்தியத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் மற்றும் கேன்சர் கேர் எனும் அமைப்பு ஆகியவற்றால் மேற்கொள்ளப் பட்டது.
- இது மும்பையிலுள்ள டாடா நினைவு மையத்தின் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது.
- CAR – T செல் சிகிச்சை முறையானது மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினுடைய உயிரி அறிவியல் மற்றும் உயிரிப் பொறியியல் துறையினால் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது.
- இதற்கு BIRAC – PACE என்ற திட்டத்தின் கீழ் உதவி வழங்கப் பட்டுள்ளது.

- தற்போது இவர்களுடைய CAR-T சிசிச்சை முறையானது தேசிய உயிரி மருந்துத் திட்டத்தின் கீழ் முதல்கட்ட மற்றும் இரண்டாம் கட்ட பரிசோதனைக்கு உட்படுத்தப் படும்.




## சுற்றுச்சூழல் செய்திகள்

**Sea snot**



- துருக்கியின் மர்மரா கடலில் சீ ஸ்நாட் எனும் பெரும்படலம் ஒன்று ஏற்பட்டுள்ளது.
- மர்மரா கடல் கருங்கடலை ஏஜியான் கடலுடன் இணைக்கின்றது.
- சீ ஸ்நாட் என்பது ஒரு கடலில் உருவாகும் சாம்பல் அல்லது பச்சைக் கசடு போன்ற மெலிதான ஓர் அடுக்காகும்.

- இது கடல்சார் சூழலுக்கு பெரும் ஆபத்தினை விளைவிக்கும்.
- பாசிகளில் ஊட்டச்சத்து மிகையாகும் போது இது உருவாகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 2020 ஆம் ஆண்டின் 50 மிகவும் விரும்பத்தகு மகளிர் பட்டியல் - டைம்ஸ் இதழ்

- டைம்ஸ் இதழானது தனது 2020 ஆம் ஆண்டின் 50 மிகவும் விரும்பத்தகு மகளிர் பட்டியலை சமீபத்தில் வெளியிட்டது.
- இது பல்வேறு துறைகளில் திறம்படச் செயலாற்றும் 40 வயதிற்குட்பட்ட பெண்களை சில பரிமாணங்கள் அடிப்படையில் பட்டியலிடுகிறது.
- டைம்ஸ் இதழின் இந்தப் பட்டியலில் ரியா சக்கரவர்த்தி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.
- சுசாந்த்சிங் ராஜ்புத் என்ற நடிகரின் திடீர் மறைவு தொடர்பான சர்ச்சைகளின் காரணமாக கடந்த ஆண்டில் பெரும்பாலான செய்திகளில் இவரது பெயர் அடிபட்டுக் கொண்டு இருந்தது.
- 2020 ஆம் ஆண்டு பிரபஞ்ச அழகிப் போட்டியில் மூன்றாமிடம் பெற்ற அட்லின் கேஸ்டிலினோ அவர்கள் இப்பட்டியலில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.
- நடிகை திசா பதானி, கியாரா அத்வானி மற்றும் தீபிகா படுகோன் ஆகியோர் இதில் முறையே மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றனர்.

# விளையாட்டுச் செய்திகள்

## சுனில் சேத்ரி



- 36 வயதான இந்தியக் கால்பந்து வீரர் சுனில் சேத்ரி அர்ஜென்டினாவின் லியோனல் மெஸ்ஸியை முந்தியுள்ளார்.
- 74 கோல்களை அடித்து சர்வதேச நடப்பு வீரர்கள் வரிசையில் இவர் இரண்டாம் இடத்திற்கு முன்னேறியிருக்கிறார்.
- சேத்ரி தற்போது பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரான மெஸ்ஸியை 2 கோல்கள் என்ற கணக்கில் முந்தியிருக்கிறார்.
- 73 கோல்கள் அடித்து மூன்றாமிடத்தில் உள்ள ஐக்கிய அரபு அமீரகத்தின் அலி மப்கௌத் என்பவருக்கு முந்தைய இடத்திற்கு (இரண்டாமிடத்தில்) சேத்ரி முன்னேறி உள்ளார்.

- வங்காளதேச அணிக்கு எதிரான போட்டியில் இவர் இந்த சாதனையை நிகழ்த்தினார்.
- சுனில் சேத்ரி கேப்டன் பென்டாஸ்டிக் (Captain Fantastic) எனவும் அழைக்கப் படுகிறார்.
- சர்வதேச அளவில் அதிக கோல்கள் அடித்த நடப்பு வீரர்கள் என்ற பட்டியலில் கிறிஸ்டியானோ ரொனால்டோவை அடுத்து சேத்ரி இரண்டாமிடத்தில் உள்ளார்.

# இதரச் செய்திகள்

## QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2022

**Top varsities** | JNU, featuring for the first time in the QS World Universities Ranking list, is among the top-600 in the world

*= indicates shared ranking*

| 2022 global rank | Name |
|---|---|
| 177= | Indian Institute of Technology, Bombay |
| 185 | Indian Institute of Technology, Delhi |
| 186= | Indian Institute of Science, Bengaluru |
| 255= | Indian Institute of Technology, Madras |
| 277= | Indian Insititute of Technology, Kanpur |
| 280 | Indian Insititute of Technology, Kharagpur |
| 395= | Indian Insititute of Technology, Guwahati |
| 400= | Indian Institute of Technology, Roorkee |
| 501-510 (ranking band) | University of Delhi |
| 561-570 (ranking band) | Jawaharlal Nehru University, Delhi |

- லண்டனில் அமைந்துள்ள குவாக்கரலி சைமண்ட்ஸ் (QS) என்ற நிறுவனமானது 2022 ஆம் ஆண்டிற்கான QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையை வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள சிறந்த 400 உலகப் பல்கலைக்கழகப் பட்டியலில் 8 இந்தியப் பல்கலைக் கழகங்களும் இடம் பெற்றுள்ளன.
- முதல் 200 பல்கலைக் கழகங்களுள் மூன்று இந்தியப் பல்கலைக் கழகங்கள் இடம் பெற்றுள்ளன. அவை,
  - இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், மும்பை – 177,
  - இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், டெல்லி – 185,
  - இந்திய அறிவியல் கல்வி நிறுவனம், பெங்களூரு – 186
- பெங்களூருவிலுள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது "உலகின் முன்னணி (சிறந்த) ஆராய்ச்சி நிறுவனம்" என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
- ஆராய்ச்சியின் தாக்கத்தை மதிப்பிடும் ஆசிரியர் ஆய்வறிக்கை என்ற குறியீட்டில் (Citations per Faculty indicator) இந்த நிறுவனம் நூற்றுக்கு நூறு என்ற மதிப்பினைப் பெற்றுள்ளது.
- ஆராய்ச்சி அல்லது எந்தவொரு பரிமாணத்திலும் ஓர் இந்திய நிறுவனமானது முழு மதிப்பினைப் பெறுவது இதுவே முதல்முறையாகும்.

- இந்தத் தரவரிசையில் அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது தொடர்ந்து 10 ஆண்டுகளாக முதலிடத்திலுள்ளது.
- இதனையடுத்து இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமானது இரண்டாம் இடத்திலுள்ளது.
- அமெரிக்காவின் ஸ்டான்போர்டு மற்றும் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் ஆகிய பல்கலைக் கழகங்கள் மூன்றாம் இடத்தைப் பகிர்ந்து கொண்டு உள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★